முதல்வர் அனைத்து நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்!

# கைத்தறி நெசவாளர்களின் நலனையும் அரசு பாதுகாத்து வருகிறது!

## உண்மைக்குப் புறம்பான தகவலைத் தெரிவித்த மருத்துவர் ராமதாசுக்கு – அமைச்சர் ஆர்.காந்தி பதிலடி!



சென்னை, செப். 1- உண்மைக்குப் புறம்பான தகவலை மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார் என்றும், தமிழ்நாடு அரசு, கைத்தறி நெசவாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை செலுத்தி அனைத்து நலத்திட்டங்களையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறது என்று பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ச. இராமதாசுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் ஆர்.காந்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச. இராமதாசு, வெளியிட்டுள்ள 30.08.2024 நாளிட்ட அறிக்கையில், பொங்கல் 2025 திருநாளையொட்டி, தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான வேட்டி சேலை முழுவதையும் விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து வாங்கயிருப்பதாகவும், இதனால் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வேலையிழப்பர் எனவும் தெரிவித்துள்ளார்.

### ரூ.1,059 கோடி மதிப்பில் வெளிச்சந்தையில் விற்பனை!

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 114 சங்கங்களை சார்ந்த 12,831 கைத்தறி நெசவாளர்கள் மட்டும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். எஞ்சிய கைத்தறி நெசவாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் வெளிச்சந்தைக்கான இரகங்களின் உற்பத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2023-24-ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் ரூபாய் 1241 கோடி மதிப்பிலான ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் 14 விழுக்காடு அளவிற்கு மட்டுமே அரசு திட்டங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது, ரூபாய் 1059 கோடி மதிப்பிலான, அதாவது 86 விழுக்காடு ஜவுளிகள் கோஆப்டெக்ஸ் மற்றும் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, முதியோர் ஒய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின் போது வருவாய் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் வேட்டி மற்றும் சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைக்கு முதியோர் ஓய்வூதியம் திட்ட பயனாளிகளுக்கு 49.15 இலட்சம் சேலைகளும், 18.31 வேட்டிகளும், கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு முழுவதுமாக உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வருவாய் துறைக்கு வழங்கப்பட்டது.

### உண்மைக்குப் புறம்பான தகவல்!

கைத்தறித் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வேட்டி-சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2024-இன் கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த 12831 கைத்தறி நெசவாளர்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டு 46.43 இலட்சம் சேலைகளும் 20.86 இலட்சம் வேட்டிகளும் நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து வருவாய் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனவே, இவரது அறிக்கையில் கடந்த ஆண்டு 73 லட்சம் வேட்டிகள், 50 லட்சம் சேலைகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும்.

மேலும், நடப்பாண்டில் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைக்கு, முதியோர் ஓய்வூதியம் திட்டத்திற்கென கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலை வாய்ப்பு வழங்கி இவர்களால் உற்பத்தி செய்யப்படும் சேலைகள் மற்றும் வேட்டிகள் அனைத்தும் கோஆப்டெக்ஸ் வாயிலாக கொள்முதல் செய்து வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

### கைத்தறி நெசவாளர்களுக்கு பாதிப்பில்லை!

இதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் உற்பத்தி திட்டத்தின் எண்ணிக்கையிலோ அல்லது நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நெசவுக்கூலியிலோ எவ்வித குறைவும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாசு, அவர்கள் வெளியிட்டுள்ள 30.08.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கு மாற்றாக ஒய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதால் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களுக்கு நடப்பாண்டில் அவர்கள் பெற்று வரும் கூலிக்கான அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்வு, இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் இரு மாதங்களுக்கு ஒருமுறை 300 அலகுகள் இலவச மின்சாரம், 60 வயது நிறைவடைந்த நெசவாளர்களுக்கு ஓய்வூதியம், காலஞ்சென்ற நெசவாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஒய்வூதியம், கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 90 விழுக்காடு அரசு மான்யத்தில் தறிகள் மற்றும் உபகரணங்கள், குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் தறிகள், தறி உபகரணங்கள், தறிக் கூடங்கள் மற்றும் நெசவுப் பயிற்சி உள்ளிட்ட நலத்திட்டங்கள், நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு 20 விழுக்காடு மான்யத்துடன் கூடிய கடன் வழங்குதல், ஆண்டுதோறும் நெசவாளர்களுக்கான சிறப்பு மருத்துவ இலவச முகாம்கள் நடத்துதல் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 4 இலட்சம் மானியத்தில் வீடு கட்டும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், கைத்தறி நெசவாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பில் அதிகபட்ச அக்கறை செலுத்தி பல்வேறு நலத்திட்டங்களை செவ்வனே நிறைவேற்றி வருகிறது என தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே அடிப்படை ஆதாரமற்ற உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுவது பொறுப்பான மூத்த அரசியல் தலைவருக்கு அழகல்ல.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

திருப்பத்தூர் மாவட்டம்

# நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, பொதுபணித்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக

கீழ்கண்ட தேதிகளில் நடைபெறும் கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்களை சம்மந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து நடத்திடவும், இக்கூட்டத்தில் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர், நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் நாள், நகரம், ஒன்றியம், பேரூர், இடம் விவரம் வருமாறு:

| வ.எ. | நாள் | நேரம் | நகரம் / ஒன்றியம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 01.09.24 - ஞாயிறு | காலை 9 மணி | மாதனூர் கிழக்கு ஒன்றியம் | JBR மஹால், மாதனூர் |
| 2 | | காலை 11 மணி | மாதனூர் மத்திய ஒன்றியம் | SS மஹால், பள்ளித் தெரு |
| 3 | | நண்பகல் 12 மணி | மாதனூர் மேற்கு ஒன்றியம் | SVN மஹால், கரும்பூர் |
| 4 | | பிற்பகல் 2 மணி | ஆம்பூர் நகரம் | ஜெகசக்தி மஹால், சான்றோர்குப்பம் |
| 5 | | பிற்பகல் 3.30 மணி | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் | ஜோதி மஹால், பத்தாப்பேட்டை |
| 6 | | மாலை 4.30 மணி | உதயேந்திரம் பேரூர் | இருதய ஆண்டவர் சமுதாய கூடம், உதயேந்திரம் |
| 7 | 02.09.24 - திங்கள் | காலை 9 மணி | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | ஸ்ரீ சீனிவாச திருமண மஹால், குரிசிலாப்பட்டு |
| 8 | | காலை 10.30 மணி | ஆலங்காயம் பேரூர் | ஸ்ரீ ராஜலட்சுமி திருமண மண்டபம், ஆலங்காயம் |
| 9 | | காலை 11.30 மணி | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் | RR மஹால், மேல்நிம்மியம்பட்டு |
| 10 | | பிற்பகல் 12.30 மணி | வாணியம்பாடி நகரம் | KPA பேலஸ், வாணியம்பாடி |
| 11 | | பிற்பகல் 2 மணி | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் | AN மஹால், திம்மாம்பேட்டை |
| 12 | | பிற்பகல் 3.30 மணி | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | லட்சுமி மஹால் மண்டலவாடி |
| 13 | 03.09.24 - செவ்வாய் | காலை 9 மணி | ஜோலார்பேட்டை நகரம் | ஸ்ரீராஜராஜேஸ்வரி மஹால், ஜோலார்பேட்டை |
| 14 | | காலை 10.30 மணி | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் | மாணிக்கம் மஹால், தாமலேரிமுத்தூர் |
| 15 | | நண்பகல் 12 மணி | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் | துரை சண்முகம் மஹால், அக்ரஹாரம் |
| 16 | | பிற்பகல் 2 மணி | கந்திலி தெற்கு ஒன்றியம் | ஸ்ரீ வள்ளி மஹால், கெஜல்நாயக்கன்பட்டி |
| 17 | 04.09.24 - புதன் | காலை 9.30 மணி | திருப்பத்தூர் நகரம் | SRK கன்வென்சன் ஹால், திருப்பத்தூர் |
| 18 | | காலை 11 மணி | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் | சுந்தரம் மஹால், வெங்கலாபுரம் |
| 19 | | நண்பகல் 12 மணி | கந்திலி கிழக்கு ஒன்றியம் | நாராயிணி மஹால், கசிநாயக்கன்பட்டி |
| 20 | | பிற்பகல் 2 மணி | கந்திலி மத்திய ஒன்றியம் | GSR மஹால், நந்தனம் காலேஜ் ரோடு |
| 21 | | பிற்பகல் 3.30 மணி | கந்திலி மேற்கு ஒன்றியம் | செல்வி சந்திரன் மஹால், காக்கங்கரை |
| 22 | | மாலை 4.30 மணி | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய அலுவலகம். |
| 23 | | | நாட்றம்பள்ளி பேரூர் | |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**
செயலாளர், திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.

---

திருப்பத்தூரில்

# 23 மகளிர் அணிகள் பங்கேற்ற - 5வது ஆண்டு அகில இந்திய கபடி போட்டி!

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. செப். 1- சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் திருப்பத்தூர் ஒன்றிய, பேரூர் மாவட்ட இளைஞரணி, மாவட்ட மாணவரணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி, மாவட்ட அயலக அணி, மாவட்ட சுற்றுச் சூழல் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகள் சார்பாக அகில இந்திய அளவிலான மகளிருக்கான 5ம்ஆண்டி கபடிப் போட்டி நடைபெற்றது. நேற்று முன்தினம் 30ஆம் தேதி முதல் இன்று 1ம் தேதி வரை மூன்று நாட்கள் நாகப்பா மருதப்பா பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரே அமைக்கப் பட்டுள்ள திடலில் நடைபெறுகிறது. இந்த கபடி போட்டியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்.

இந்த விளையாட்டு போட்டிகளில் அகில இந்திய அளவில் மத்திய பிரதேசம் ,புது டெல்லி, பஞ்சாப், வடக்கு ரயில்வே, மேற்கு வங்காளம், ஹரியானா, மேற்கு வங்காளம் பாபா, ஹரியானா குருக்கள், மங்களூர் கல்பா, மகாராஷ்டிரா சக்தி பிரதர்ஸ், ஈரோடு பி கே ஆர் நாக்பூர் மரத்தான், நெல்லை பாரதி மதுரை ஸ்பார்க் கோவிலூர் ஆண்டவர் கல்லூரி உட்பட 23 மகளிர் அணி வீரர்கள் பங்கேற்கிறார் கள். இந்த போட்டிக்கான காலரி மற்றும் மேடையினை திருப்பத்தூர் ஒன்றிய கழகச் செயலாளரும், ஒன்றிய குழு தலைவருமான எஸ். சண்முக வடிவேல், தொழிலதிபர் துவார் ஜி. சந்திரசேகர் ஆகியோர் ரூபாய் 4 லட்சமும், முதல் பரிசு ரூபாய் 2 லட்சத்தினை சிவகங்கை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகில ராணி நாராயணன் ஆகியோரும் இரண்டாம் பரிசு ஒன்றரை லட்சத்தினை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ் .எஸ். ஏ. வல்லபாய், மூன்றாம் பரிசு ரூபாய் ஒரு லட்சத்தினை மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் த. சரவணன் நான்காம் பரிசு ரூபாய் 75 ஆயிரம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் ஆகியோர் வழங்குகிறார்கள் .இது தவிர பல்வேறு பரிசுகளும் வழங்கப்படுகின்றது. இந்த போட்டியினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. 80ஆண்டுகளாக தன் வாழ்வை தமிழக மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் அர்ப்பணித்தவர் தலைவர் கலைஞர். அவர் ஐந்து முறை முதல்வராக இருந்த பொழுது தமிழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டார் . ஆதலால் இன்று தமிழகம் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. ஏழை ,எளிய, பிற்படுத்தப்பட்ட, நடுத்தர மக்கள் வாழ்வில் உயரும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி அதை செயல்படுத்தி னார். தலைவர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா வழியில் ஆட்சியையும் கட்சியையும் சிறப்பாக நடத்தினார். அவரது வழியில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் 3 ஆண்டுகளில் அனைத்து மக்கள் நலத் திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கிராமங்கள் முதல் நகரங்கள் வரை நடைபெற்றது. இதனை கழகத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் சிறப்பாக கொண்டாடினார்கள். அகில இந்திய அளவில் இங்கு ஐந்தாவது ஆண்டு மகளிர் அணிக்கான கபடி போட்டி நடைபெறுகிறது. இதற்காக வந்துள்ள அகில இந்திய மகளிர் அணி கபடி விளையாட்டு வீரர்களை வரவேற்கிறேன். தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி பிரேமா பெரிய கருப்பன், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மகளிர் அணி நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன், ராஜேஸ்வரி சேகர் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், அயலக அணி துணை அமைப்பாளர் சன். சீமான் சுப்பையா, பிள்ளையார் பட்டி ராஜேஷ், காரைக்குடி மாநகர மேயர் எஸ். முத்து துரை, துணை மேயர் என்.குணசேகரன், ஆர். கார்த்திகேயன், கே.பி.எஸ். பழனியப்பன், மற்றும் ஏ.எம்.கண்ணன், கடம்பூர் கண்ணன், முன்னாள் எம்.எல்.ஏ.எஸ். மாரியப்பன் கென்னடி, கான்முகமது, பஷீர் அகமது, ஷாஜகான், முத்துக்குமார், சுப்பிரமணியன், உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இன்று (ஒன்றாம் தேதி) மாலை இறுதி போட்டிகள் நடைபெறுகின்றது . இந்த விளையாட்டு போட்டிக்கான ஏற்பாடுகளை காளிமுத்து, வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன் அயலக அணி சன் சீமான் சுப்பையா, பிள்ளையார்பட்டி ராஜேஷ், சேவியர் உட்பட நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

**செப்டம்பர் 1 (2018)**



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**